

# சித்திரா சித்தி

**பொன் குலேந்திரன் - கனடா**

என் அப்பா ராஜாராமுக்கு வயது நாற்பது. இருபது வயதில் காதலித்து அவரின் பெற்றோரின் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்தவர் . அதனால் அவரின் இனத்தவர்கள் அவரை ஒதுக்கி வைத்துவிட்டார்கள் . அப்பாவுக்கு நான் மூத்த பையன் என் பெயர் சிவராம் . நான் பிறந்து அடுத்து இரண்டு வருடங்ககளுக்குப் பின் பிறந்தவள் என் தங்கை சங்கரி. எங்கள் குடும்பதை பாரமரித்தவள் என் அம்மா திலகவதி. அவள் எங்கள் குடும்பத்துக்கு ஒரு திலகம் என்று என் அப்பா அடிக்கடி சொல்லுவார். அப்பாவும் அம்மாவும் வாக்குவாம் பிடித்ததை நான் ஒரு போதும் காண்டதில்லை . என் அப்பா ஒரு அமெரிக்க தனியார் நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் மனேஜராக வேலை. சம்பளம் எடுத்த நாளே முழு சமபளத்தையும் அம்மாவிடம் கொண்டு வந்து அப்பா கொடுப்பார். அம்மா சரியான சிக்கனக்கரி. என்மேலும் சங்கரி மேலும் ஒரு துரும்பு பட விடமாட்டாள். அவள் ஒரு பட்டதாரி என்பதால் நாங்கள் இருவரும் படைத்து பட்டம் பெற்று பெரிய அரச உத்தியோகத்தில் இருக்கவேண்டும் என்பது அவள் ஆசை . அவளை திருமணம் செய்ய முன் என் அப்பா சிகரட் குடிப்பார். பார்டி பிரியர் . நண்பர்களோடு மது அருந்துவார். அந்த பழகத்தை என் அம்மா படிப்படியாக மாற்றி விட்டாள்.

எனக்கு பத்து வயசாக இருக்கும் போது ஒரு நாள் அவள் நெஞ்சுவலிக்குது என்று சொல்லி படுத்தவள் தான் எழும்பவேயில்லை. அவளின் மறைவுக்குப் பின் அப்பா எப்படி குடும்பத்தை நடத்துவது என்று திகைத்து நின்றார். என்னையும் சங்கரியையும் வளர்க்க அவர் பட்ட கஷ்டம் எனக்குத் தெரியும். அம்மா இருக்கும் போது எங்கள் இருவரையும் குளிப்பாட்டுவது தூங்கும் போது கதை சொல்வது அவள்தான். வீட்டில் சமையலுக்கு ஒரு வேலைக்காரியை வைக்க கூட அவாள் விரும்பவைல்லை . அம்மாவின் மறைவுக்குப் பின் அப்பா எங்கள் இருவரையும் குளிப்பாட்ட பட்ட பாட்டை நினைக் எனக்கு சிரிப்பு வந்தது. அம்மா இருக்கும் போது சமையல் அறை பக்கம் அப்பா போனதில்லை . வீடு வரவு செலவு எல்லாம் அம்மா தான் பொறுப்பு.

அம்மாவின் மறைவுக்கு பின் சமையல் புத்தகத்தை பார்த்து சமைக்க கற்றுக் கொண்டார். பிறகு அவருடைய நண்பர் இந்திரனின் ஆலோசனையின் படி சமையல் செய்யவும், வீட்டை பாராமரிக்கவும் தினமும் ஒரு வேலைக்காரி காலையில் வந்து மாலையில் போவாள். சில சமயம் வால் சமையல் சம்மன்களை திருடி செல்வதி நான் கண்டிருகிரேம். அப்பாவுக்கு வீட்டில் என்ன நடக்கிறது என்று கிடையாது. அம்மாவின் பிரிவின் பின் தனிமை அப்பாவை வாட்டியது அப்பா கவலையில் திரும்பவும் சிகரெட் குடிக்கவும், மது அருந்தவும் ஆரம்பித்தார் .

என் பார்வதி பெரியம்மாவும், பெரியப்பாவும் அப்பாவின் போக்கில் மாற்றதை கண்டு எதாவது செய்யதாக வேண்டும் என்று முடிவு எடுத்தார்கள் . என் அம்மாவின் விதவை சின்னம்மா ஈஸ்வரியின் வறிய குடும்பதுக்கு ஏதாவது உதவ வேண்டும் என்று என் பெரியம்மா நினைத்தாள் . ஈஸ்வரிக் ஒரே மகள் சித்திரா தனியார் வைத்தியசாலையில் நேர்ஸ் வேலை. அவளின் உழைப்பில் ஈஸ்வரியிடம் குடும்பம் போய் கொண்டிருந்தது. மகளுக்கு சீதனம்

கொடுக் பணாம் இல்லாததால் சித்திராவின் ன் திருமணம் போய்ய் கொண்டிருந்தது. அப்போது தான் பெரியம்மாவுக்கு தன் உடன் பிறவா சகோதரியை என் அப்பாவுக்கு இரண்டாம் தாரமாக திருமணம் செய்து வைத்தால் என்ன என்ற யோசனை வந்தது . அப்பாவோடு பெரியம்மாவும் பெரியப்பாவும் பேசிப் பார்த்தார்கள். அவர் எங்களை நினைத்து மறுத்து விட்டார்.

:" எடேய் ராஜா உனக்கு இப்ப வயது நாற்பது. ஐம்பது வயதிலும் சிலர் மறு திருமணம் செய்திருக்கிறார்கள். . உன் குடும்பதை நடத்த ஒருத்தி குடும்பத்துக்கு அவசியம் தேவை. அவள் உன் இரு பிள்ளைகளுக்கும் தெரிந்தவளாக இருக்கவேண்டும். உன் மனைவியின் அக்கா சொல்லும் யோசனை ஏற்றுக் கொள்" என்று சொன்னார்.

: இந்திரா பார்வதி என்னக்கு இரண்டாம் திருமணம் பேசி வந்த சிதிரவி எனக்கும் என் பிள்ளைகளுக்கும ஏற்றகனவே தெரியும். அநாள் ஒரு பயம் "

" ஏற்றகனவே தெரிந்தவளை திருமணம் செய்வதில் என்ன பயம் உனக்கு. அவளின் பெற்றோருக்கு அவள் ஒரே ஒரு பெண். நேர்சாக வேலை செய்கிறாள். அதனால் பொறுமையும், மனித அன்பும் அவளிடம் நிட்சயம் இருக்கும்"

" அதேல்லாமம நீ சொல்வது உண்மை, ஆனால் வலுக்கு பிள்ளைகள் பிறந்தவுடன் எனக்கு பிறனைத் பிழைகளை பிறகு படுடம் எலேல் சித்திகளையும் போல் நடத் தொடங்குவாள். என் மூத்த தாரத்து இரண்டு பிள்ளைகளும் பாதிக்கப் படக்கூடாது"

" எனக்கு சித்திராவைத் தெரியும் . நான் அவள் வெளி செய்யும் வைத்தியசாலையில் சுகமில்லாமல் மூன்று நாட்கள் இருந்த போது எனக்கு அறிமுகமானவள் . அவளுக்கு குழந்தைகள் மேல் பிரியம்

அதிகம். நீ நினைப்பது போல் ஒன்றும் நடக்காது . நீ தைரியமாக உன் சம்மதத்தைக் கொடு" இந்திரன் மாமா சொன்னார்

அப்பாவுக்கு இந்திரன் மாமா மேல் தனி நம்பிக்கை. அவர் சொன்னபின் இரண்டாம் திருமணதுக்கு அவர் ஒப்புதல் கொடுத்தார் சீதனம் இல்லாமல் தன் மகளை எங்கள் அப்பாவுக்கு இரண்டாம் தாரமாக கொடுக்க ஈஸ்வரி பாட்டி சம்மதித்தாள் . அதோடு சித்ரா ஆண்டிக்கு என் அம்மா மேல் ஒரு தனிப் பிரியம். எங்கள் இருவரையும் நன்கு அவளுக்குத் தெரியும் அதோடு எங்கள் அம்மாவுக்கு இனத்தவள்.

எனக்கும் சங்கரிக்கும் சித்திரா ஆண்டி , சித்தி சித்ராவானாள்

அம்மா எங்களை கவனித்தது போல் அவளும் எங்களை பாசத்தோடு நடத்தினாள் . அப்பா சிகரெட் குடியாதியும் மது அருந்துவதையும் நிறுத்திப் போட்டார். அவர்களிடையே குடுமப் தகராறு இருக்கவில்லை.

ஒரு நாள் அப்பா அவளோடு பேசியதைக் கேட்டேன்.

" சீதா எங்களுக்கு திருமணம் ஆகி ஒரு வருஷம் அகைவிட்டஹு. இதுவரி நீர் என் இலைகளை அன்பாக நடதுரீர். என் முதல் மனவியை போல். இந்த அன்பு உமக்கு பிள்ளைகள் பிறந்தால் தொடருமா?

" ஏன் அப்படி என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா"

" அதில்லை வழக்கத்தில் சித்திமார்களின் கொடுமை பற்றி கேள்வி பட்டிருப்பீரே. எனக்குத் தெரிந்த இரு குடுபம்பங்களில் நடப்பதை கேள்விப்பட்டு தான் நான் உம்மை கேட்கிறேன்"

" நிட்சயம் அதுபோல் நடக்காது அத்தான்"

" எப்படி நீ உறுதியக சொல் முடியும்"

“ அத்தான் ஏற்கனவே உங்களுக்கு தெரியாமல் கருத்தடை விட்டேன். இனி எனக்கு பிள்ளைகள். எனக்கு இனி சிவராமும் சங்கரி மட்டுமே பிள்ளைகள்” என்று பதில் சொல்லிவிட்டு தன அறைக்குள் சித்திரா சித்தி போய் விட்டாள்

****